# வாக்குமூலம்
# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
# வழக்கு எண் : SC.No. 178/2024
# வழக்கு சாட்சி PW-7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காஜா முகமது | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சையது முகமது | தொழில் | : | இல்லை |
| கிராமம் | : | பூலான்குடியிருப்பு | வயது | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் பூலான்குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் வேலை எதுவும் செய்யவில்லை. எதிரியை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு நானும், இறந்து போன கருப்பசாமி என்பவரும் செங்கோட்டையிலிருந்து பூலான்குடியிருப்பு போய்க் கொண்டிருக்கும்போது செங்கோட்டை பாரஸ்ட் ஆபிஸ் பக்கம் வைத்து மதியம் 01.00 மணிக்கு போலீசார் ஆஜர் எதிரியை விரட்டி பிடித்தார்கள். அப்போது எதிரி உள்ளூர்காரர் என்பதினால் நானும், இறந்து போன கருப்பசாமி என்பவரும் போலீசார் பக்கத்தில் சென்றோம்.

அப்போது போலீசார் எதிரியை விசாரித்தார்கள். அப்போது எதிரி, திருமலை வீட்டின் ஓட்டை பிரித்து பணத்தை எடுத்ததை ஒப்புக்கொண்டார். போலீசார் பணத்தை எங்கு வைத்திருக்கிறாய் என்று கேட்டார். எதிரி பூலான்குடியிருப்பில் உள்ள அவரது ஆச்சி வீட்டில்

வைத்திருப்பதாகவும், தன்னை கூட்டிச் சென்றால் எடுத்து தருவதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கருப்பசாமி என்பவரும் கையெழுத்து செய்தோம். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.2 ஆகும். அதன் பின்னர் பூலான்குடியிருப்பில் உள்ள எதிரியின் ஆச்சி வீட்டிற்கு சுமார் 05.00 மணிக்கு சென்றோம். அங்கு வைத்து எதிரி மஞ்சள் பையில் ரூ.2000/- நோட்டுக்கள் சுமார் 66 எண்ணம் எடுத்து கொடுத்தார். அதை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.3 ஆகும். ரூ.2000/- நோட்டுக்கள் சுமார் 66 எண்ணம் – அ.சா.பொ.1 வரிசை ஆகும். மஞ்சள் பை அ.சா.பொ.2 ஆகும். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், கருப்பசாமி என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னுடன் கையெழுத்து செய்த கருப்பசாமி தற்போது இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல்விசாரணையில் கூறியுள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன். செங்கோட்டையில் நான் எதற்காக வந்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நானும், கருப்பசாமியும் ஸ்கூட்டியில் வந்தோம். பூலான்குடியிருப்பிற்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்று போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் எதிரி என் முன்னால் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 10:49:06 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 178/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW–8</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துக்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மாரியப்பன் | தொழில் | : | தச்சு வேலை |
| கிராமம் | : | பூலான்குடியிருப்பு | வயது | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பூலான்குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் தச்சு வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு போலீசார் விசாரணைக்காக பூலான்குடியிருப்பில் உள்ள சேனைத்தலைவர் மண்டபத்திற்கு அருகில் விசாரணைக்காக வந்திருந்தார்கள். அப்போது சாட்சியாக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். சாட்சி திருமலையின் பக்கத்து வீட்டுக்காரர். அதனால் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். சாட்சி திருமலையை யாரோ தலையில் அடித்து பணத்தை எடுத்து கொண்டு சென்றதாக கேள்விபட்டேன். வேறு எதுவும் இந்த வழக்கு குறித்து எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

சேனைத்தலைவர் மண்டபத்திற்கு மேற்கு பக்கம் சந்திரன் வீடு உள்ளது என்றால் சரிதான். அதற்கு அருகில் ஐயப்பன் வீடு காலிமனையை தாண்டி உள்ளது. திருமலையின் வீட்டிற்கு அருகில் கிருஷ்ணன் வீடு உள்ளது. மேற்கு பக்கம் முருகேசன் வீடு உள்ளது என்றால் வீடு உள்ளது, அவர் பெயர் தெரியாது. மேற்படி இடங்களை போலீசார் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. பின்னர் சம்பவயிடத்தில் வைத்து காலை 07.00 மணிக்கு இரத்தக்கறை படிந்த தேங்காய் துருவி ஒன்று, கட்டம் போட்ட துணி ஒன்று, துண்டு ஒன்று, உலக்கை ஒன்று ஆகியவற்றை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும், மேற்படி தாட்சியில் நானும், முத்துராஜ் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னிடம் எதுவும் விசாரிக்கவில்லை என்றாலும், கையெழுத்து மட்டும் கேட்டார்கள் என்றாலும் சரிதான்.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 10:49:17 +0530